செய்தி வெளியீடு எண் : 2298 நாள் : 19.12.2022

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான முன்னெடுப்பே "நான் முதல்வன்" திட்டம். இத்திட்டம் நம் மாநிலத்தில் ஆண்டுக்கு 12 லட்சம் இளைஞர்களுக்கு முன்னேற்றத்திற்கான மாற்றத்தினை தரும் திறன்களை வழங்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகின்றது.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட இணைய தளத்தில் (www.naanmudhalvan.tn.gov.in) இலவச படிப்புகள், குறைவான கட்டணத்துடன் கூடிய படிப்புகள் மற்றும் பாடத்திட்டத்துடன் கூடிய படிப்புகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. "நான் முதல்வன்" திட்டமானது பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக், அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், பள்ளிகள் மற்றும் துணை மருத்துவ படிப்புகளை உள்ளடக்குகிறது.

"நான் முதல்வன்" திட்டத்தின் முக்கிய நோக்கம், அரசு மற்றும் தனியார் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் தொழில்துறையின் தொடர்ச்சியான இணைப்பை எளிதாக்குவதாகும். இதன் அடுத்த நிலையாக தொழில்துறை கூட்டமைப்புகளான CII, FICCI, MCCI, EFSI, TANSTIA போன்ற தொழில் அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் தானியங்கி வாகனத்துறை, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், விருந்தோம்பல், ஜவுளி, ஆயத்த ஆடை மற்றும் பல்வேறு துறைகளின் முன்னணி தொழில் வல்லுநர்களுடன் இன்று கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் திறன் பயிற்சியில் தொழில்துறையை நேரடியாக ஈடுபடுத்தவும், பல்வேறு தொழில் துறைகளில் தொழில் பழகுநர் புதிய பணிவாய்ப்புகளை ஏற்படுத்துவது ஆராய்ச்சி புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கமளித்தல் குறித்து எடுத்த நடவடிக்கைகள் மற்றும் துவங்க வேண்டிய ஆயத்தப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் வாயிலாக தொழில் துறையின் திறன் தேவைக்கேற்ப புதிய திறன் பயிற்சிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.

5–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்ற மாணவர்கள், தொழில் கல்வி பயின்றவர்கள் டிப்ளமோ, பொறியியல் பட்டதாரிகள், கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் கல்வித் தகுதிக்கேற்ப மாதம் ரூ.5,000/– முதல் ரூ9,000/– வரை செயல்படுத்தப்படும். தொழில் பழகுநர் திட்டத்தில் தமிழக மாணவர்கள் அதிக அளவு சேர்ந்து பயன்படும் வகையில் தொழில் துறையுடன் கலந்தாய்வு செய்யப்பட்டது.

திறன் மேம்பாட்டு சூழல் மேம்படுத்துவதற்காக இன்று 19.12.2022 நடைபெற்ற அரசு – தொழில்துறை கலந்தாய்வு கூட்டத்தில் தொழில்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.S.கிருஷ்ணன் இஆப., நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.N.முருகானந்தம் இ.ஆ.ப., மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் திரு.T.உதயச்சந்திரன் இ.ஆ.ப, உயர்கல்வி துறையின் முதன்மை செயலாளர் Dr.D.கார்த்திகேயன் இ.ஆ.ப, தொழில்நுட்ப கல்வி ஆணையர் திருமதி.G.லஷ்மி பிரியா இ.ஆ.ப, மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப, நான் முதல்வன் திட்ட முதன்மை நிர்வாக அலுவலர் Dr.M.ஜெயபிரகாசன் ஆகிய அரசு உயர் அதிகாரிகளும் முன்னணி தொழில்துறை வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in